26.7.2019.
அசல் வழக்கு எண் 299-2014

வா.சா. 2பழனிச்சாமி சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் பசுமலை டி.பிகே மெயின் ரோட்டில் குடியிருந்து வருகிறேன் என் வீட்டின் பழைய கதவு எண்.19 புதிய கதவு எண்.51 மேற்படி முகவரியில் நான் குடியிருந்து வருவது சம்பந்தமாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி முகவரியில் நான் குடியிருக்கவில்லை என்றும் அதனால் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இன்பம் இல்லம் அருகே தங்கியுள்ளேன் அதற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றும் வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பசுமலையில் உள்ள கல்லுபட்டரையில் வேலை பார்த்து வருகிறேன். வாதி எனக்கு என்ன உறவுமுறை என்றால் உறவுமுறை இல்லை சிறுவயதில் இருந்து பழக்கம். வாதி சிறுவயதில் இருந்து தியாகராஜர் காலனியில் வசித்து வருகிறார் வாதியின் அம்மா அப்பாவை எனக்குத் தெரியும். எனக்கு 43 வருடங்களாக வாதியை தெரியும். வாதி கதவு எண் 90ல் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான் வாதி எந்த வருடம் கதவு எண்.90ல் குடியிருந்துவந்தார் என்றால் அது எனக்குத் தெரியாது. எனக்கு விபரம் தெரிய வாதி கதவு எண்.90ல் தான் குடியிருந்துவருகிறார். வழக்கு பற்றி எனக்குத் தெரியும். கதவு எண் 90க்கு வடக்கே முருகேசன் என்பவரும் மேற்கு பக்கம் ரவிசந்திரன் என்பவரும் கிழக்கே டீ கடைகாரரும், தெற்கே காலியிடம் உள்ளது. வாதி வீட்டினை ஒட்டியே காலி இடம் அமைந்துள்ளது. என்ன பரிகாரம் கோரி வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி வீட்டின் பின்னால் உள்ள இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியாது. காலியிடத்தின் பிளாட் எண் எனக்குத் தெரியாது. **பிளாட் எண். 90-ஐ வாதி எந்த வருடம் கிரையம் பெற்றார் என்றால் மில்லில் இருந்து கொடுத்ததாக தெரியும். எந்த வருடம் கிரையம் பெற்றார் என்று**

தெரியாது. எவ்வளவு தொகைக்கு கிரையம் பெறப்பட்டது என்று எனக்கு தெரியாது. யார் பெயரில் கதவு எண். 90-ல் கண்ட சொத்துக்கு கிரையம் பெறப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வாதியின் தந்தை மலைச்சாமி என்பவர் 10, 12 வருடத்திற்கு முன்பு இறந்து விட்டார். 1-ம் பிரதிவாதியிடம் இருந்து கதவு எண். 90-ல் கண்ட பிளாட்டை தான் கொடுத்துள்ளனர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வேறு பிளாட்டுகள் எதுவும் வாதி கிரையம் பெற்றாரா என்றால் இல்லை. வாதிக்கும், 1-ம் பிரதிவாதிக்கும் இடையே கதவு எண். 90-ஐ தவிர வேறு ஒப்பந்தம் எதுவும் இல்லை என்றால் சரி தான். வாதியின் வீட்டின் பின்புறம் உள்ள காலி இடத்தின் நீள அகலம் தெரியுமா என்றால் தெரியாது. 3 சென்ட், சதுரடி எவ்வளவு என்று எனக்கு தெரியாது. பசுமலை காலனியில் இருந்து 1-ம் பிரதிவாதி மீது ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்கு எண் தெரியாது.மேற்படி வழக்கில் 1-ம் பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றும், அவர் யாருக்கும் விற்கலாம் என்று தீர்ப்பு ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பசுமலை காலனி சார்பாக நடந்த வழக்கு பற்றி எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. முருகேசன் குடியிருந்து வரும் வீட்டின் சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் பிளாட் எண் என்ன பிரச்சினை என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி வீட்டின் பின்புறம் உள்ள காலியிடம் தனியாருக்கு பாத்தியப்பட்ட பட்டா இடம் என்றால் வாதிதான் புழங்கி வருகின்றார். காலியிடத்தின் பட்டா எண் எனக்கு தெரியாது. காலியிடம் 1-ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி மீது என்னென்ன குற்ற வழக்குகள் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. காலையில் வேலைக்கு சென்றுவிட்டு எப்பொழுது திரும்புவேன் என்றால் வீடும் பட்டறையும் ஒன்று தான்.

அதிகமான வேலை இருக்கும் என்றால் சரிதான். வாதி மீது 2, 3 குற்றவியல் வழக்குகள் நிலுவையில் இருப்பது தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதியின் மகன் அமெரிக்கன் கல்லூரியில் படித்து வருகிறார். வாதியின் வீட்டிற்கும், காலியிடத்திற்கும் இடையே இடைவெளி உள்ளது என்றால் சரியல்ல. காலியிடத்தில் வாதி வேலி அமைத்துள்ளார், பொருட்கள் எதுவும் போட்டு வைக்கவில்லை, மரங்கள் உள்ளது. வாதி வீட்டின் பின்புறம் வாசல் எதுவும் இல்லை. காலியிடத்தில் வாதி முருகேசன் வேலி அமைத்து 6, 7 வருடங்கள் இருக்கும். வாதி வீட்டின் பின்புறம் உள்ள காலியிடத்தை கிரையம் பெறுவது சம்மந்தமாக வாதி மற்றும் அவரது தந்தைக்கும், 1-ம் பிரதிவாதிக்கும் இடையே எந்தவிதமான ஒப்பந்தமும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து 1-ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு சொந்தமானது என்றும், 1-ம் பிரதிவாதி நிறுவனத்தினர் அதை அனுபவம் செய்து வருகின்றனர் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு பக்கத்தில் காலி இடம் உள்ளது என்றும், அதுவும் 1-ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை வாதி கிரையம் பெறுவதற்கு 1-ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் வாதி அனுபவத்தில் இல்லை என்றும், வாதிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

## 2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரம் எனக்கு நேரடியாகத் தெரியும். வாதி அழைத்து வந்ததின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். வழக்கு சொத்து மற்றும் அதனை ஒட்டியுள்ள இடம் மீனாட்சி மில்லுக்கு பாத்தியப்பட்டது என்றால்

சரிதான். மீனாட்சி மில் நிர்வாகம் கம்பெனியிடம் அனைத்து சொத்துக்களையும் 1-ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு விற்பனை செய்துவிட்டனர் என்றால் சரிதான். வாதி குடியிருந்து வரும் வீடு மீனாட்சி மில்லில் இருந்து பெறப்பட்டது. மீனாட்சி மில் நிர்வாகத்திடம் இருந்து 1-ம் பிரதிவாதி கிரையம் பெற்று 1-ம் பிரதிவாதியிடம் இருந்து வாதியின் தந்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். வழக்கில் வாதி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் எதையும் நான் பார்த்ததில்லை. நான் குடியிருந்து வரும் வீடு 1-ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு கட்டுப்பட்ட சொத்தா என்றால் இல்லை. வழக்கு சம்மந்தமான வருவாய் துறை ஆவணம் எதையும் நான் பார்த்ததில்லை. வாதிக்கும், 1-ம் பிரதிவாதிக்கும் இடையே ஏதேனும் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வாதி எந்த ஆவணத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. 1-ம் பிரதிவாதி நிறுவனம் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை 3-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதியிடம் கிரையம் செய்து கொடுத்துவிட்டனர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 3-ம் பிரதிவாதியிடம் இருந்து 2-ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் பிளாட் எண் எனக்கு தெரியாது. மீனாட்சி மில்லுக்கு சொந்தமான சொத்துக்கள் அனைத்தும் வீட்டுமனை என்றால் சரிதான். வழக்கு பற்றி எனக்கு தெரியும். வாதி வழக்கில் தாக்கல் செய்துள்ள விபரங்கள் பொய்யானது என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதி நிறுவனம் வாதியின் தந்தைக்கு வாய்மொழி மூலமாகவோ, எழுத்து மூலமாகவோ ஒப்பந்தம் ஏற்படுத்தியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதி நிறுவனம் வாதிக்கு அனுப்பிய அறிவிப்பு பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் வாதி வேலி அமைத்துள்ளதற்கான ஆவணம் எதுவும் உள்ளதா என்றால்

எனக்கு தெரியாது. தாவா சொத்தினை 3-ம் பிரதிவாதியிடம் இருந்து 2-ம் பிரதிவாதி கிரையம் பெற்று தாவா சொத்தில் வேலி அமைத்து 2-ம் பிரதிவாதி பராமரித்து அனுபவம் செய்து வருகிறாா் என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமான விபரம் எதுவும் எனக்கு தெரியாது என்றும், வாதி எனக்கு உறவினா் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் வாதி தரப்பு வழக்கிற்கு எந்த வித்திலும் ஆதரவாக இல்லை என்றால் சரியல்ல. வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.